தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஹேவிளம்பி, ஆனி 2, திருவள்ளுவர் ஆண்டு—2048

2017 ஜூன் 16, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பகுத்துஉண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை."

கிடைத்த உணவைப் பலருக்கும் கொடுத்து, தானும் உண்டு, அனைத்து உயிர்களையும் காப்பாற்றுதல், நீதிநூல்கள் கூறுகின்ற அறங்கள் அனைத்திலும் மிக உயர்ந்ததாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

21—

தேசிய காடு வளர்ப்புத் திட்டம்

***9812—திரு. கே.ஏ. பாண்டியன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் தொகுதி, பிச்சாவரம் வனப் பகுதியை தேசிய காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் சேர்க்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.

சிதம்பரம் தொகுதியில் உள்ள பிச்சாவரம் வனப் பகுதியின் மொத்தப் பரப்பளவு 1,413.98 ஹெக்டேர் ஆகும். இவ்வனப் பகுதியைச் சார்ந்து 20 கிராமங்கள் உள்ளன. அவற்றில் 9 கிராம மக்கள் மீன் பிடிக்கும் தொழிலையும் மற்றுமுள்ள கிராம மக்கள் விவசாயம் மற்றும் பிற தொழில்களையும் சார்ந்துள்ளனர். இவ்வனப் பகுதியைச் சார்ந்த மக்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தைக் கருத்தில்கொண்டு, மாநில மற்றும் மத்திய அரசுகளின் நிதியாதாரத்தின் அடிப்படையில், பிச்சாவரம் சதுப்பு நிலக் காடுகளின் மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பிச்சாவரம் வனப் பகுதியினை தேசிய காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் சேர்க்க அரசு முன்வருமா என்று சிதம்பரம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் மாண்பிற்குரிய திரு. கே.ஏ. பாண்டியன் அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன் அவர்கள் குறிப்பிட்டுள்ளதுபோல், தேசிய காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் போதுமான நிதி பெற முடியாது என்பதால், மாண்புமிகு அம்மாவின் அரசு 2013–2014 முதல் 2018–2019 வரையில் பிச்சாவரம் வனப் பகுதியின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மைப் பணிகளை மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்புத் திட்டத்தின்மூலம் செயல்படுத்தும் நோக்கத்தில், ஐந்து ஆண்டுகளுக்கு மேலாண்மைத் திட்டம் தயார் செய்து, ஒப்புதல் பெற்றுள்ளது.

2014–2015 ஆம் ஆண்டில் 87.99 இலட்சம் ரூபாயும், 2015–2016 ஆம் ஆண்டில் 80.6 இலட்சம் ரூபாயும் மற்றும் 2016–2017 ஆம் ஆண்டில் 113.99 இலட்சம் ரூபாயும் செலவிடப்பட்டு, கண்காணிப்பு கேமராக்கள் அமைத்தல், கண்காணிப்புக் கோபுரங்கள் கட்டுதல், வாழ்விடங்களை மேம்படுத்துதல், தோட்டங்கள் அமைத்தல், சமுதாய வளர்ச்சிப் பணிகள் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல், சூழல் சுற்றுலா போன்ற பணிகள் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதைப் பெருமையாக இந்த அவையில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டபடி, பிச்சாவரம் வனப் பகுதியை தேசிய காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் கொண்டு வர வேண்டிய அவசியம் எழவில்லை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன் அவர்கள்.*

திரு. கே.ஏ. பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றி மேல் வெற்றி குவித்த எங்களின் வெற்றித் திருமகளே! தஞ்சம் என வந்தவரை தாய்போல் ஆதரித்து, வஞ்சகர்களின் செயல்களுக்கு வாள்முனையில் தீர்ப்பளித்து, அன்புக்கு இடம் கொடுத்து, அறம் காத்து, மக்களுடைய குறை போக்கிய எங்களின் குல விளக்கே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

தமிழகத்தின் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்து, ஆட்சிச் சக்கரத்தினை சுழற்றிக்கொண்டு, எங்களுக்கெல்லாம் ஆக்கமும், ஊக்கமும் தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் இந்த நேரத்தில் பணிவோடு வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சிதம்பரம் தொகுதிக்குட்பட்ட பிச்சாவரம் வனப் பகுதியில் ஏறக்குறைய 2,800 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள சதுப்புநிலக் காடுகள் இந்தியாவின் இரண்டாவது மிகப்பெரிய மாங்குரோவ் காடுகளாகும். உலக அளவில் ஆராய்ச்சி செய்யப்பட்டு, சதுப்புநிலக் காடுகளில் முதன்மையாக விளங்குவது இந்த பிச்சாவரம் காடுகளாகும்.

முற்பகல் 10–05

கடந்த 2004 ஆம் ஆண்டு உலகை உலுக்கிய ஆழிப் பேரலையால் உலகின் பல பகுதிகளில் மிகப் பெரிய உயிர்ச் சேதங்களும், பொருட்சேதங்களும் உண்டானது. ஆனால், இந்த மாங்குரோவ் காடுகள் அமைந்துள்ள பகுதிகளில் சுனாமிப் பேரலையின் தாக்கம் குறைந்து காணப்பட்டது. அழிந்து வரும் இந்த அரிய வகை சதுப்புநிலக் காடுகளை காத்திடவும், மிகப் பெரிய அளவில் அபிவிருத்தி செய்திடவும் தேசிய காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் சிதம்பரம் தொகுதியிலுள்ள பிச்சாவரம் வனப் பகுதியினை

சேர்த்திட மாண்புமிகு அம்மாவின் அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியன் அவர்கள், தேசிய காடு வளர்ப்புத் திட்டத்தைப் பற்றி இங்கே சொல்லியிருக்கிறார்கள். நான் முதலில் சொன்ன குறிப்புகள் அவருக்கு ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும் நடப்பு 2017–2018 ஆம் ஆண்டில் அவர் கூறிய பிச்சாவரம் சதுப்புநில மேம்பாட்டுப் பணிகளுக்காக 161.47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மத்திய அரசுக்குக் கருத்துரு 9–6–2017 ஆம் தேதியில் அனுப்பி வைக்கப்பட்டு, ஆணை எதிர்பார்க்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தக் கருத்தைச் சொன்னவுடன் உடனடியாக அதற்கு தனியாக ஒரு கடிதத்தை மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கும், சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்கும் எழுதியிருக்கிறார்கள். கடந்த ஆண்டினைப் போன்றே நடப்பாண்டிலும் நிதி ஒப்புதல் பெறப்பட்டு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அவர் குறிப்பிட்டிருக்கின்ற பிச்சாவரம் பகுதி பற்றி உங்களுக்குத் தெரியும். நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நடித்த இதயக்கனி திரைப்படத்திலும் மற்றும் பல சினிமாக்களிலும் கடலினுடைய* back water *வருகின்ற இடங்கள் காண்பிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, அந்த சதுப்புநிலக் காட்டில் என்னென்ன பணிகளை மேற்கொள்ள முடியும் என்பது குறித்து ஆய்வு செய்யப்படும். சுனாமியால் இந்த இடங்கள் பாதிக்கப்பட்டிருப்பதால், நான் ஏற்கெனவே சொல்லியதைப்போல அதற்கு நிதியும் ஒதுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. தேசிய காடு வளர்ப்புத் திட்டத்தில் மறுபடியும் இது சேர்க்கப்படுமா என்று கேட்டிருக்கிறார். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அதற்கு ஒப்புதல் பெறப்பட்டு நிதியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பாண்டியன் அவர்கள் சொன்ன கருத்தை மனதிலே வைத்து, மறுபடியும் அவர்களுக்கு ஒரு நினைவூட்டுக் கடிதம் எழுதி, அந்தப் பகுதியிலுள்ள சதுப்பு நிலத்தை*

2017 ஜூன் 16]

மேம்படுத்துவதற்கு நம்முடைய அரசு முயற்சி செய்யும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன் அவர்கள்.*

திரு. கே.ஏ. பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட பிச்சாவரம் வனப் பகுதியினை கண்டுகளிக்க வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இவர்கள் வனப் பகுதியினை படகில் சென்று முழுமையாக சுற்றிப் பார்க்க ஏதுவாக இப்பகுதியில் உள்ள முகத்துவாரங்களை ஆழப்படுத்திட மாண்புமிகு அம்மாவின் அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியை ஆழப்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்; நல்ல கருத்து. முகத்துவாரப் பகுதிகளிலும், மற்ற இடங்களிலும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வனப் பகுதியில் வேறு என்னென்ன பணிகள் செய்யப்பட வேண்டுமென்பதை சுற்றுலாத் துறை மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ஆகியோரிடம் கலந்துபேசி, அவர்கள் சொல்கிற பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். முகத்துவாரங்களை ஆழப்படுத்துகின்ற பணியைப் பொறுத்தவரையில், நிதிநிலையைப் பொறுத்து அவை பரிசீலனை செய்யப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.*

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முதுமலை வனப் பகுதியில் உண்ணிச் செடிகளும், பார்த்தீனியச் செடிகளும்*

நிறைய இருப்பதனால் வன விலங்குகள் அங்கிருந்து வெளியே வந்து ஊருக்குள் புகுந்து மிகுந்த தொல்லைகளை மக்களுக்கு ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் அந்த உண்ணிச் செடிகளையும், பார்த்தீனியச் செடிகளையும் களைவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா? கொஞ்சம் எடுப்பதற்கு மட்டும்தான் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 321 சதுர கிலோ மீட்டர் இருக்கிறது. அத்தனைப் பகுதிகளிலும் உண்ணிச் செடிகளும், பார்த்தீனியச் செடிகளும் படர்ந்திருப்பதனால்தான் வன விலங்குகள் ஊருக்குள் வந்து பெரிய தொல்லைகளை விளைவிக்கின்றன. எனவே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் இதில் சிறப்புக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும். இது ஒரு பெரிய பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. எனவே, இதில் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும். இதைப்போல இரண்டு மக்னா யானைகள் பெரிய தொல்லைகளை விளைவித்துக் கொண்டிருக்கின்றன. அதில் ஒரு மக்னா யானையைப் பிடித்துவிட்டார்கள். இன்னொரு மக்னா யானை இருக்கிறது. இரண்டு கோரிக்கைகளையும் உடனடியாகச் செய்ய வேண்டும். ஏனெனில், வன விலங்குத் தொல்லை பெரிய பிரச்சினையாக இருக்கிறது. எனவே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாகத் தலையிட்டு இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கும், மூலக்கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திராவிடமணி அவர்கள், வனப் பகுதியையொட்டி இருப்பதால் வனத்தைப் பற்றி நன்கு அறிந்தவர். அரசின் மூலமாக வனப் பகுதிகளில் வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன என்று பாராட்டி கருத்து தெரிவித்ததற்கு அரசின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பார்த்தீனியச் செடியின் தன்மையைப் பற்றி அவர் நன்கு அறிந்தவர். அதன் விதைகள் காற்றில் பரவக் கூடிய தன்மை உடையவை. காற்று, தண்ணீர் எங்கு கிடைத்தாலும்

பார்த்தீனியச் செடியின் விதைகள் பரவிவிடும். ஒட்டடை அடிக்காமல் விட்டுவிட்டால், அது எப்படி பரவி, அந்தப் பகுதியே மோசமாகிவிடுமோ அதைப்போன்று அச்செடிகள் பரவிவிடும். இதுகுறித்து திரு. திராவிடமணி அவர்களுக்கு நன்றாகத் தெரியும். (குறுக்கீடு) மின் விசிறி இல்லாமல் காற்றில்தான் போகிறதே! மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு அனைத்தும் தெரியும். எனினும், எதுவும் தெரியாததுபோன்று கேள்விகள் கேட்பார்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி அவர்கள் குறிப்பிட்ட பகுதிகளில் ஏற்கெனவே வனத் துறை மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனினும், தற்போது அவர் கூறிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வனத் துறை மூலமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நல்ல செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ், காடு வளர்ப்புப் பணிகளுக்காக பல்வேறு பகுதிகள் மத்திய அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட ஜவ்வாது மலை மற்றும் திருவண்ணாமலை கிரிவலப் பாதை போன்ற பகுதிகளில் சாலை அமைப்பதாக இருந்தாலும் அல்லது வளர்ச்சிப் பணிகள் எதையாவது மேற்கொள்ள வேண்டியிருந்தாலும், 1 மடங்கு இடத்திற்கு 10 மடங்கு இடம் தர வேண்டும் என்று சொல்லி மத்திய அரசு அனுமதி தர காலதாமதம் செய்கிறது. இதனால் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் நடைபெறாமல் தடைபட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்கின்ற வகையில், தமிழக அரசே காடு வளர்ப்புத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும். தேசிய காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்ட பகுதிகளில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள மத்திய அரசிடம் அனுமதி வாங்குவதில் ஏற்படும் சிரமத்தைக் கருத்திற்கொண்டு, நான் சொன்ன கருத்தை அரசு பரிசீலிக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மத்திய அரசிடம் எதைக் கேட்டாலும் அனைத்தும் தாமதமாகிறது என்பது அனுபவபூர்வமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி அவர்களுக்குத் தெரியும், அவரும் அமைச்சராக இருந்தவர். திருவண்ணாமலை கிரிவலப் பாதை இதன்காரணமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனத்திடம் சென்றாலும், இந்தத் திட்டத்தில் பணி செய்வதில் காலதாமதம் ஏற்படுகின்றது. இதுபோன்ற நடைமுறை சரியாக வராது என்பதால்தான், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 2013–2014 ஆம் ஆண்டு முதல் 2017–2018 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு அரசின் சொந்த நிதியில் பிச்சாவரம் பகுதியில் பணிகளைச் செய்திருக்கிறார்கள். மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. பிச்சாண்டி அவர்கள் குறிப்பிட்டு சில பகுதிகளைச் சொன்னால், அவரிடம் குறிப்புகளை வாங்கி, நிதி ஆதாரத்தை வைத்து என்ன செய்ய முடியுமோ அவை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

22—

பாதாள சாக்கடைத் திட்டம்

***2360—திரு. சௌ. தங்கப்பாண்டியன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராஜபாளையம் தொகுதி, ராஜபாளையம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?